## கோவிட்-19 முக்கியத் தகவல்

The **Department of Social and Health Services** கோவிட்-19 ஐத் தடுக்கவும் கையாளவும் உதவுகிறது. எங்கள் வாடிக்கையாளர்களின் ஆரோக்கியத்திலும் பாதுகாப்பிலும் நாங்கள் மிகவும் கவனம் கொள்கிறோம். ஆளுநர் இன்ஸ்லீயின் *வீட்டில் இருப்போம், ஆரோக்கியமாய் இருப்போம்* கட்டளை மற்றும் மீட்புத் திட்டத்தை நாங்கள் பின்பற்றுகிறோம்.

எங்களிடம் இலவச மொழிச் சேவைகள் உள்ளன. இந்தச் சேவைகளில் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்புகள், பிற வடிவங்களிலான எழுத்துபூர்வ தகவல்கள் அடங்கும். எங்கள் சேவைகளை அணுக உங்களுக்கு உதவி தேவையெனில், டிஎஸ்எச்எஸ்-ஐ **800-737-0617** என்ற எண்ணில் அழைத்து 4 ஐத் தேர்வுசெய்யவும். வாஷிங்டன் தொடர் சேவைக்கு நீங்கள் **711** என்ற எண்ணிலும் அழைக்கலாம்.

டிஎஸ்எச்எஸ்-ன் திட்டங்கள் மற்றும் சேவைகளை கோவிட்-19 எவ்வாறு பாதித்துள்ளது?

### மூப்படைதல் மற்றும் நீண்டகால உதவி

நீண்டகால பராமரிப்பில் வசிப்போருக்கு கோவிட்-19 மிகவும் தீங்கானதாக இருக்கக்கூடும். மே 12 ம் தேதிப்படி, மருத்துவ இல்லங்கள், வாழ்க்கை வசதிகள் உதவி மற்றும் வயதுவந்தோர் குடும்ப இல்லங்கள் வருகையாளர்களை அனுமதிக்காது. இந்த விதிமுறைகள் சர்வதேச தொற்றுப்பரவலின்போது மாறக்கூடும்.

பராமரிப்பு வசதிகளுக்கான பார்வையாளர் விதிமுறைகளைக் காண நீங்கள் FamHelp இணையதளத்துக்கு வருகைதரலாம். கோவிட்-19 தொற்று கண்டறியப்பட்டவர்களுக்கான பராமரிப்பு வசதிகளின் பட்டியலையும் இந்த வலைத்தளத்தில் காணலாம். நீண்டகால பராமரிப்பு வசதிகள் குறித்து உங்களுக்குக் கேள்வியிருந்தால், தயவுசெய்து 888-856-5691 என்ற எண்ணில் அழைக்கவும். எங்கள் வேலை நேரம் காலை 6 முதல் இரவு 10 வரை.

காதுகேளாதோர் மற்றும் குறைவான கேட்புத்திறனுடையோருக்கான அலுவலகம், காதுகேளாதோர், கேட்பு மற்றும் பார்வையற்றோர் அல்லது குறைவான கேட்புத்திறனுடையோருக்கு சேவையளிக்கிறது. சேவை வழங்குநர்களுடனும் அவர்கள் பணியாற்றுகிறார்கள். கேட்புத் திறனிழந்தோருக்கு நீங்கள் தொடர்பு உதவி வழங்க எண்ணினால், தயவுசெய்து அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும்.

- மின்னஞ்சல்: ODHHCOVID-19@dshs.wa.gov

- தொலைபேசி: 360-338-6042
- TTY/TDD-க்கு: 360-725-3455
- அழைப்பைப் பெறுபவர்களிடம் TTY/TDD இல்லையெனில், தயவுசெய்து 711 -ஐ அழைக்கவும்
- ஓடிஎச்எச் இணையதளம்

**Behavioral Health Administration**

Behavioral Health Administration வயதுவந்தோர் மற்றும் குழந்தைகளுக்கு சிறப்பு அர்ப்பணிப்பு மையம் மற்றும் தடயவியல் மன நலச் சேவைகள் அலுவலகம் ஆகிய மூன்று மாகாண மனநல மருத்துவமனைகளில் சேவைகளை வழங்குகிறது.

கோவிட்-19 பரவலைத் தடுக்க இந்த இடங்களுக்கு வருகைகளை நாங்கள் நிறுத்தியுள்ளோம். உரிய நேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு காணொளிமூலம் தொலைதூரச் சேவைகளை நாங்கள் அளிக்கிறோம். பார்வையாளர் கொள்கை அல்லது பிற கேள்விகளுக்கு, தயவுசெய்து பின்வரும் எண்களில் தொடர்புகொள்ளவும்:

- மேற்கு மாகாண மருத்துவமனை – **253-582-8900**
- கிழக்கு மாகாண மருத்துவமனை – **509-565-4000**
- குழந்தை படிப்பு மற்றும் சிகிட்சை மையம் – **800-283-8639**
- தடயவியல் மனநலச் சேவைகள் அலுவலகம்
  - மேப்பிள் லேன் – **360-664-4641**
  - யாகிமா – **253-582-8900**
  - ஃபோர்ட் ஸ்டைலகூம் – **253-984-5651**
- சிறப்பு அர்ப்பணிப்பு மையம் – **253-588-5281, ext. 0095**

**Division of Vocational Rehabilitation**

தற்போதைக்கு Division of Vocational Rehabilitation அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

- ஆலோசகர்கள் சேவைகள் மற்றும் ஆதரவை தொலைபேசி வாயிலாக வழங்குவர்.
- சேவை புதுப்பித்தல்களுக்கான தொலைபேசி எண்: **800-637-5627**

**Developmental Disabilities Administration (DDA)**

அலுவலக முகப்பறைகள் தற்போதைக்கு மூடப்பட்டுள்ளன. ஃபிர்க்ரெஸ்ட் பள்ளி, லேக்லேண்ட் கிராமம், ரெயினியர் பள்ளி மற்றும் யாகிமா சமவெளி பள்ளி போன்றவை இந்நேரத்தில் வருகையாளர்களை அனுமதிப்பதில்லை. உங்களுக்குக் கேள்விகள் இருப்பின் கீழ்க்கண்ட எண்களில் தொடர்புகொள்ளவும்.

- டிடிஏ வழக்கு மேலாளரிடமிருந்து முன் ஒப்புதல் பெற்று தொலைதூரச் சேவைகளை நாங்கள் வழங்கலாம்.
- தொலைதூரத்திலிருந்தபடியே மதிப்பீடுகளும், அம்மதிப்பீடுகளை நிறைவேற்றும் காலவரையும் வழக்குக்குத் தக்கபடி நீட்டிக்கவும் படலாம்.
- ஐலேண்ட், கிங், சான் ஜூவான், ஸ்காஜிட், ஸ்னோஹோமிஷ் மற்றும் வாட்காம் மாவட்டச் சேவைகளுக்கு, அழைக்கவும்: 800-314-3296.
- கிளாலம், கிளார்க், கோவ்லிட்ஷ், கிரேஸ் ஹார்பர், ஜெஃபர்சன், கிட்சப், மேசன், பசிபிக், பியர்ஸ், ஸ்கமேனியா, தர்ஸ்டன் அல்லது வாகியகம் மாவட்டங்களுக்கான சேவைகளுக்கு அழைக்கவும்: 800-248-0949
- பிற மாகாண மாவட்டச் சேவைகளுக்கு 800-462-0624 என்ற எண்ணை அழைக்கவும்

**<u>Economic Services Administration</u>**

<u>குழந்தை ஆதரவு:</u> Division of Child Support புறக்கூடங்கள் தற்போதைக்கு மூடப்பட்டுள்ளன. வழக்கு விபரங்களைப் பெற அல்லது தொகை செலுத்த, அழைக்கவும் **800-442-KIDS (5437).** பணிநீக்கங்களை அல்லது மூடுதல்களை தொழில் உரிமையாளர்கள் தெரியப்படுத்த வேண்டியிருப்பின், அழைக்கவும் **800-562-0479**.

<u>சமூகச் சேவை அலுவலகங்கள்:</u> வரம்புக்குட்பட்ட சேவைகள் **நேர ஒதுக்கீட்டின் கீழ் மட்டும் கிடைக்கின்றன. நீங்கள் செய்யக்கூடியவை**:

- உங்களிடம் பொது பட்டுவாடா அஞ்சல் சேவைகள் இருப்பின் அல்லது நீங்கள் ஒரு துரித உணவு பெறுநர் எனில் ஓர் இபிடி அட்டையை எடுக்கலாம்.
- அவசர உதவி சேவைகளைத் தேர்ந்தெடுக்கலாம்.
- ஆவண வேலைகளைக் கைவிடலாம்.

<u>வாடிக்கையாளர் சேவை தொடர்பு மையம்:</u> சேவைகளைப் பெற அழைக்கவும் **877-501-2233**. நீங்கள் செய்யக்கூடியவை:

- பலன்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
- வழக்கு விபரங்களைப் பெறவோ அல்லது மாற்றங்களைத் தெரிவிக்கவோ செய்யலாம்.
- ஓர் தகுதி நிலை அல்லது இடை சான்றிதழ் மதிப்பீட்டை நிறைவுசெய்யலாம்.
- புதிய இபிடி அட்டையைக் கோரலாம்.
- ஓர் வொர்க்ஃபர்ஸ்ட் வழக்கை அல்லது சமூகப் பணியாளரை அடையலாம்.

வாஷிங்டன் இணைப்பு: மக்கள் ஆங்கிலம் மற்றும் ஸ்பானிய மொழிகளில் இணையச் சேவைகளைப் பெறலாம். WashingtonConnection.org வலைதளத்துக்குச் சென்று பலன்களுக்கு விண்ணப்பிக்க, மதிப்பீடுகளை பூர்த்திசெய்ய, மாற்றங்களைத் தெரிவிக்க மற்றும் பிற உள்ளூர் சேவைகளைக் கண்டறியவோ செய்யலாம்.

வயதான, பார்வையற்ற அல்லது ஊனமுற்றோர்/வசிப்பிடம் மற்றும் அடிப்படைத் தேவைகள் பரிந்துரைத் திட்டங்கள்: தற்போதைக்கு ஏபிடி ஊனமுற்றோர் மதிப்பீடுகளை நாங்கள் ஒத்திவைத்துள்ளோம். மேலும் நாங்கள் எச்இஎன் பரிந்துரை விதிமுறைகளை மாற்றியிருப்பதோடு சில தேவையான கண்காணிப்புகளை நிறுத்தியுள்ளோம். எச்இஎன் மற்றும் ஏபிடி வழக்குகள் குறித்த மேலும் தகவல்களுக்கு தயவுசெய்து **877-501-2233** என்ற எண்ணில் அழைக்கவும்.

அடிப்படை உணவு: மார்ச் முதல் மே 2020 வரை குடும்பத்தினர் எண்ணிக்கைக்கேற்ப அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச அளவில் உணவு பலன்களையும் டிஎஸ்எச்எஸ் சேர்த்துள்ளது. கோவிட்-19 காலத்தின் ஒவ்வொரு மாதத்திலும் மாகாண அரசை அவசரகால துணை உணவுகளுக்காக டிஎஸ்எச்எஸ் கேட்டுக்கொள்ளும்.

- *அடிப்படை உணவு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி:* அனைத்து பிஎஃப்இடி திட்டங்கள் மற்றும் சேவைகளும் கிடைக்கின்றன. பிஎஃப்இடி கூட்டாளர்கள் தொலைபேசி மற்றும் இணையம் வாயிலாக சேவைகளை வழங்குகின்றனர்.
- *சார்ந்திருப்போரின்றி சுயமாய் இயங்கக்கூடிய வயதுவந்தோர்:* ஏபிஏடபிள்யுடி-களுக்கான பணித் தேவைகள் தற்போதைக்கு தேவைப்படாது. டிஎஸ்எச்எஸ் இப்போதும் பங்கேற்பதில் ஆர்வமுள்ள இயலக்கூடியவர்களை பரிந்துரைத்து வருகிறது.

பலன்கள் மதிப்பீடுகள்: டிஎஸ்எச்எஸ் ஏப்ரல், மே அல்லது ஜூன் 2020 மாதங்களில் நிலுவையாகும் தகுதிநிலை மதிப்பீடுகளை ஆறுமாதங்களுக்கு நீட்டித்துள்ளது. ஏப்ரல், மே அல்லது ஜூன் 2020 மாதங்களில் காலாவதியாகும் இடை-சான்றிதழ் மதிப்பீடுகளை முடிக்கவேண்டியதில்லை. அனைத்து பிற தகுதிநிலைத் தேவைகளையும் உங்கள் குடும்பம் பூர்த்திசெய்யும்வரை பலன்கள் தொடரும்.

பேரிடர் பண உதவித் திட்டம்: குடும்பங்கள் மற்றும் குழந்தையற்ற மக்களுக்கும் டிசிஏபி கிடைக்கிறது. நீங்கள் குடிமக்களில் ஒருவராக இருக்கவேண்டியதில்லை. வருவாய் மற்றும் மூலவள வரம்புகளளை பூர்த்திசெய்யும் மக்களுக்கு தகுதியுண்டு. அவர்கள் பிற பணத் திட்டங்களுக்கு தகுதிபெற மாட்டார்கள். மேலும் அறிய **877-501-2233** என்ற எண்ணை அழைக்கவும்.

<u>அகதி மற்றும் குடியேறியவர் உதவி அலுவலகம்:</u> அகதிகள் மற்றும் குடியேறியோருக்கு உதவ ஓஆர்ஐஏ பின்வருவனவற்றுக்கான திட்டங்களைக் கொண்டுள்ளது:

- பணி தேடுதல் மற்றும் பயிற்சி.
- குடியுரிமை உதவி.
- இளையோர் வழிகாட்டுதல்.
- அகதிகளில் மூத்தோர், குழந்தைகள், மாணவர்கள் மற்றும் பிறருக்கான உதவி.
- கோவிட்-19 காலத்தில் வழக்கமான திட்டங்கள் தொலைதூரம் வழியாகத் திறந்திருக்கும். அலுவலகத்தில் நீங்கள் வேலைகள் அல்லது வேலையின்மைக்கு விண்ணப்பிக்க, உங்கள் கல்விக்கு உதவ, மற்றும் தங்குமிட வசதி வழங்குதல் போன்றவற்றுக்கு புதிய சேவைகள் உள்ளன. அகதி பண உதவி மற்றும் அகதி மருத்துவ உதவி தகுதிநிலை செப்டம்பர் 30, 2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- சேவைகளுக்கு மற்றும் மேலும் தகவல்களுக்கு, அழைக்கவும் **360-890-0691**.

<u>தேவையுள்ள குடும்பங்கள்/வொர்க்ஃபர்ஸ்ட்-க்கான தற்கால உதவி:</u> டிஏஎன்எஃப் 60 மாத கால வரம்பு நீட்டிப்புகளில் இப்போது கோவிட்-19 காரணமாக ஏற்பட்டுள்ள இன்னலும் சேர்க்கப்பட்டுள்ளது.

- தற்போதைக்கு வொர்க்ஃபர்ஸ்ட் தேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் அவர்களால் முடிந்தால் தொடர்ந்து பங்கேற்களாம்.
- வொர்க்ஃபர்ஸ்ட் ஒப்புதல்களை நாங்கள் தற்போதைக்கு நிறுத்தியுள்ளோம். அலுவலர்களின் வீட்டு வருகைகளையும் நாங்கள் நிறுத்தியுள்ளோம்.
- நீங்கள் சமூக வேலைகளில் உள்ளவர் அல்லது வொர்க்ஃபர்ஸ்ட் வேலை-படிப்பு பங்கேற்பாளர் எனில், உங்களால் கோவிட்-19 காரணமாக பங்கேற்க இயலாவிடினும் தொடர்ந்து நீங்கள் பணியில் இருப்பதோடு உங்களுக்கு ஊதியமும் வழங்கப்படும்.